அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 19/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு .07.

1988 ஜூன் மாதம் 28 ஆம் திகதி.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்கட்கும்.

## இளைப்பாறும்போது அடையாள அட்டையும் குடும்ப விபரமும்.

விதவை அநாதைகள் ஓய்வூதியம், விதவர் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவை இலகுவாக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட ஆவணங்களை கிரமமாக செய்வதற்கு 1987 நொவெம்பர் மாதம் 17ஆம் திகதி அல்லது அத்தேதியின் பின் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறும் அரசாங்க அலுவலகர் இங்கு இணைக்கப்பட்டுள்ள படிவம் ஒன்றினைப் பூர்த்தி செய்து திணைக்களத் தலைவரினால் அதை நிதர்சனப்படுத்தியபின் ஓய்வூதியம் பெறுவதற்கு -கான விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்க வேண்டும். இப்படிவத்தின் பிரதி யொன்றை பிரத்தியேக கோவையில் இட வேண்டும்.

02. (அ) ஓய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பத்தின் படிவம் பொது 55ல், 34ஆம் பந்தியில் (4) (அ) ம் உபபந்தியில் "கொடுப்பனவு வங்கி மூலமாகக் கொடுக்குமிடத்து" என்னும் சொற்களை நீக்கவும்.

அத்துடன் (ஆ) இளைப்பாறும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்காவும் அடையாள அட்டை (திறைச்சேரி 148ஆம் படிவத்திலும், திறைச் சேரி 147ஆம் படிவத்திலும்) அனுப்ப வைக்க வேண்டுமென பதைக் குறித்துக் கொள்ளவும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பீ.எஸ்.சிறிவர்தன,
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.